**OS.NO. 43/2008      DW-1**

நாள் : 15.09.2025

பெயர் : வெங்கட்ரமணன்

த/பெ : பத்மநாபன்

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் கதவு எண் என்ன என்றால் பழைய எண் 2/39 ஆகும். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் போது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் இல்லை. அந்த ஒருதலைபட்ட தீர்ப்பில் மேல்முறையீடு செய்து தான் இந்த வழக்கு மீண்டும் நடத்த Remand ஆகி வந்தது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வ.சா.ஆ.4, 5 ஆவணங்கள் பட்டா மாற்றுவது தொடர்பான BDO விசாரணை அறிக்கை என்றால் இல்லை. இந்த ஆவணத்தை படித்து பார்த்து கூறுங்கள் என்றால் அதற்கு அவசியம் இல்லை எங்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு DRO விசாரணை நடத்தப்பட்டது அதில் பட்டா எங்களுக்கு அளிக்கப்பட்டதை தெளிவுப்படுத்தினோம். DRO விசாரணை மேற்கொண்ட போது எங்களுக்கு வந்த நோட்டீஸ் மற்றும் விசாரணையின் அறிக்கைகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அங்கு எங்களை நீதிமன்றம் சென்று தீர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள்.

எனது பிரமாணவாக்குமூலத்திலேயோ, எதிருரையிலோ இந்த வழக்கு சொத்து நான் கிரயம் பெற்றதாக கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது தகப்பனாருக்கு வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான் அதற்கு பதில்அறிவிப்பு நாங்களும் கொடுத்தோம். அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம்

காண்பிக்கப்படும் வ.சா.ஆ.8 வீட்டு வரி டிமாண்ட் நோட்டீஸ் இந்த வழக்கு சொத்திற்கானது என்றால் இல்லை. தாவா சொத்தை எனது தகப்பனார் பத்மநாப முதலியாருக்கு 1 ம் வாதியின் கணவர் தனுஷ்கோடி வாடகைக்கு விட்டார் என்றாலும் அதன் படி தான் நாங்கள் அங்கு வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. அந்த வீடு குழந்தை வேல் முதலியாருக்கு சொந்தமானது அதில் தான் நானும் என் தப்பனாரும் இதுநாள் வரை வசித்து வருகிறோம்.

குழந்தைவேல் முதலியாருக்கு குழந்தைகள் யாரும் இல்லை என்றால் சரிதான். ஆதிமூலம், சிவபிரகாஷம், பொன்னுரங்கம் ஆகியோர் குழந்தை வேல் முதலியார் பங்காளிகள் என்றால் இல்லை. குழந்தைவேல் முதலியார் எனது அப்பாவுக்கு தாய் வழி உறவு எனது அப்பாவுக்கு மாமா முறை ஆகும். அவருக்கு வாரிசுகள் இல்லை. தாவா சொத்து தொடர்பாக குழந்தை முதலியார் எனது தகப்பனாருக்கோ தாயாருக்கோ ஆவணம் எதையாவது எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வ.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் தாவா சொத்தும் இதர சொத்துக்களும் இடம்பெற்றுள்ளன என்றால் சரியல்ல. வ.சா.ஆ.1 கிரய பத்திரத்தை பற்றி நான் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. அது எனக்கு தேவையில்லை. அதில் கூறியுள்ள வாசகங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த சங்கதிகள் தெரியாமல் தான் பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சொத்து தொடர்பாக தெரிந்து தான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். வ.சா.ஆ.1 கூறிப்பிட்டுள்ள சொத்திற்கும் எனக்கும் தொடர்பு இல்லை. அதனால் அதை பற்றி தெரிந்துகொள்ளவில்லை.

வ.சா.ஆ.1 சொத்துக்கள் எனக்கு தொடர்பு இல்லை அதன் பேரில் வாதி பரிகாரம் அவருக்கு அளிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல. அது போலியான ஆவணம் அதனால் வாதி கோரிய பரிகாரம்

அவருக்கு அளிக்க எனக்கு ஆட்சேபனை உள்ளது. வ.சா.ஆ.1 ஆவணம் போலியானது என்று RDO, BDO விசாரணைகளில் நான் தெரிவித்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் நீதிமன்றத்தை அனுக சொன்னார்கள் அங்கு இருதரப்பினருக்கும் ஆவணங்கள் எதுவும் வழங்கவில்லை. ஆகவே அதற்கு ஆவணங்கள் இல்லை. எனது தகப்பனாரும், நானும் தாவா சொத்தில் வாடகைதாரர்கள் என்ற முறையில் தான் வசித்து வருகிறோம் என்றாலும் ஆகவே வாதிக்கு தாவா சொத்தை ஒப்படைக்க கடைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் நாங்கள் தான் வீடு கட்டினோம் என்பதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்காக தான் வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீது, குழாய் வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் வீடு கட்டியது ஊருக்கே தெரியும். எனது அப்பா பத்மநாப முதலியாரும், வாதியின் கணவர் தனுஷ்கோடியும் பங்காளிகள் என்றால் சரிதான். இந்த உறவு முறையின் பேரில் தான் வாய்மொழியாக தனுஷ்கோடி எங்களுக்கு தாவா சொத்தை வாடகைக்காக விட்டார் என்றாலும் அதனை பயன்படுத்தி பட்டா மாற்றம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. RDO, BDO விசாரணைகளில் நாங்கள் முறைகேடாக பட்டா மாற்றம் செய்து கொண்டது தெளிவானது என்றாலும் அதன் பிறகும் நாங்கள் வீண் தகராறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அவர்கள் தான் எனது தகப்பனார் மீது தாக்குதல் நடத்தினர் அதற்கு கலவை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். தவறான முறையில் தாவா சொத்தை அடைய வேண்டும் என்பதற்காக தவறான முறையில் எதிர்வியாஜீனம் செய்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தனுஷ்கோடி சரியான நபர்களிடமிருந்து சரியான தொகைக்கு கிரயம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.09.17 14:17:17 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.